# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 66/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவிதா லட்சுமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.11.2024

முதல் விசாரணை

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் சைபர் கிரைம் குற்றப்பிரிவில் காவல ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் உடுமலை தளி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.07.2021 ம்தேதி உடுமலை உட்கோட்ட இரவு சுற்று அலுவல் பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் 23.00 மணியளவில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் என்னுடன் தளி காவல் நிலைய உதவியாளர் சிவராஜ் காவலர் பிரேம் குமார் ஆகியோருடன் உடுமலைப்பேட்டை காவல் நிலைய சரகத்தில் மது, சூது , பிராத்தல் தடுப்பு சம்பந்தமாக ரோந்து செய்து வந்த போது 23.30 மணிக்கு வட பூதணம் கிராமத்தில் உள்ள ஐயர் விவசாய பூமியில் உள்ள சாலைக்கு சென்று பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த வீரமணி என்பவரும் கோகுல் என்பவரும் எங்களை பார்த்ததும் தப்பி ஓடிவிட்டார்கள். அதன் பின் அந்த சாலையில் திண்ணையில் அரைகுறை ஆடையுடன் படுத்திருந்த எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சி செய்த சங்கீதா, விக்னேஷ் ஆகிய இருவரையும் போலீஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து சங்கீதா என்பவரை நான் விசாரித்த போது தான் காரத்தொழுவு திருவள்ளுவர் வீதி மடத்துக்குளம் வட்டத்தில் என் அம்மா மல்லிகா எனது அப்பா மருதாசலத்துடன் எனது குழந்தைகளுடன்

வசித்து வருவதாகவும் அவருக்கும் அவரது கணவருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து குழந்தைகளுடன் வாழ்வதாகவும் கூலி வேலைக்கு சென்று மிகவும் சிரமப்பட்டு வருகிறேன் என்றும், தனது ஆறு மாதத்திற்கு முன்பு எனது அம்மா கீழே விழுந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாலும், அந்த ஆஸ்பத்திரிக்கு பக்கத்தில் உள்ள கிருஷ்ணா பேக்கரிக்கு சென்ற பொழுது அந்த பேக்கரியின் ஓனர் சந்தன கருப்பனூரை சேர்ந்த பாஸ்கர் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றும், பாஸ்கர் என்னுடைய போனை வாங்கிக் கொண்டு அடிக்கடி போன் பேசி வந்தார் என்றும், நான் கணவரை விட்டு பிரிந்து இருப்பதால் குடும்ப செலவிற்கு சிரமப்படுகிறேன் என்று சொன்னதற்கு பாஸ்கர் என்னிடம் அவர் சொல்கின்ற இடத்திற்கு வந்தால் ஆம்பளைகளுடன் உல்லாசமாக இருந்து செலவுக்கு பணம் தருகிறேன் என்றும் சொல்லி இரு முறை 500 ரூபாய் கொடுத்தார் என்றும், பாஸ்கர் இதேபோன்று நிறைய பெண்கள் இங்கு வந்து சம்பாதித்து செல்கிறார்கள் என்றும், நீயும் சரி என்றால் இதற்கு வருமாறு கேட்டுக் கொண்டார். நானும் ஒப்புக்கொண்டு பாஸ்கர் போன் செய்து கஸ்டமர் பற்றி விவரம் சொல்லி நான் அந்த இடத்திற்கு செல்வேன் என்றும், ஜாலியாக இருந்துவிட்டு பணம் வாங்கி வருவேன் என்றும் கூறினார். இன்று பாஸ்கர் நான் சொல்கின்ற இடத்திற்கு வருமாறு கூறினார். நானும் சரி என்று ஒப்புக் கொண்டு இரவு சுமார் 8.00 மணிக்கு உடுமலைப்பேட்டை பழைய பஸ் ஸ்டாப் அருகில் நின்ற போது அங்கு கோகுல் என்பவர் வந்து என்னை அழைத்துச் சென்றார் வட பூதணம் காட்டுச் சாலையில் நான் சென்றபோது வீரமணி என்பவர் உட்கார்ந்து இருந்தார். கோகுல் அங்கிருந்த வீரமணி யிடம் பணம் வாங்கிக் கொண்டு என்னை உள்ளே அனுப்பினார். கோகுல் எனக்கு போன் விக்னேஷ் என்பவருக்கு போன் செய்து அவரும் அங்கு வந்தார். அவருடன் நான் இருந்த நேரத்தில் போலீசார் ஆகிய நீங்கள் வந்து விட்டீர்கள் என்று விவரத்தை கூறினார்.சட்டப்படியாக சங்கீதா தான் பாதிக்கப்பட்ட தரப்பினர் என்பதால் அவரையும் விக்னேஷையும் கோகுல் என்பவர் என்பவரின் இருசக்கர வாகனம் பல்சர் TN 57 AC 1503 மற்றும் விக்னேஷின் பஜாஜ் சிடி 100 TN 78 V 67 95 என்ற இருசக்கர வாகனத்தையும் தனி நபர் சாட்சிகள் இல்லாததால் என்னுடன் வந்த சிவராஜ் மற்றும் காவலர் பிரேம்குமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி 16.7.2021 ஆம் தேதி அதிகாலை 00.45 மணிக்கு கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றோம். தப்பித்துச் சென்ற கோகுலை பல இடங்களில் தேடிய போது வாளவாடி பிரிவு அருகில் பாஸ்கர் என்பவரை பாதிக்கப்பட்ட பெண் அடையாளம் காட்டி அவரையும் பிடித்து விசாரித்து பாதிக்கப்பட்ட பின் சங்கீதா, விக்னேஷ் பாஸ்கர் மற்றும் கோகுல் உடன் வடபுதனம் உடுமலைப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்டதால் பிராத்தல் வழக்கு என்பதாலும் அனைவரையும் உடுமலைப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆஜர் படுத்தி தனி அறிக்கை ஒன்றை ஆய்வாளர் அவர்களிடம் ஒப்புவித்தேன். காவல் ஆய்வாளர் எனது தனிஅறிக்கையின் பெயரில் காவல் அறிக்கையின் பெயரில் காவல் ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தாரப அதன் பிண்பு வழக்கு சொத்துக்களை பாதிக்கப்பட்ட நபர் சங்கீதா, விக்னேஷ், பாஸ்கர்

ஆகியோரின் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒப்புவித்தேன். என்னிடம் காட்டப்படும் வாகனங்களை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் நான் தயார் செய்தது தான், அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ரோந்து எந்தெந்த பகுதி எத்தனை மணிக்கு சென்றிர்கள் என்றால் இரவு 11.00 மணிக்கு வடபூதனம் பகுதிக்கு போய்விட்டேன். உடன் யார் யார் வந்தார்கள் என்றால் டிரைவர் மற்றும் SI மற்றும் காவலர் பிரேம் குமார். வடபூதனம் மக்கள் வாழும் பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் விஏஓ ,பஞ்சாயத்து ஆபிஸ் இருக்கிறது என்றால அது பற்றி தெரியாது. எதிரிக்கு சங்கீதா போன் செய்ததற்கு ஆவணம், கால் ரெக்கார்டர் தாக்கல் செய்துள்ளிர்களா என்றால் IO க்கு தான் தெரியும். தப்பி ஓடிய இரண்டு பேரின் தகவலை எப்படி தெரிந்து கொண்டிர்களா என்றால் சங்கீதா மற்றும் விக்னேஷ் இருந்தாரகள் விக்னேஷ் உள்ளுர் காரர் என்பதால் ஓடிய நபர்களின் தகவலை சொன்னார்.

2. சொன்ன மாதிரி எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சங்கீதா என்பவரை கட்டாயப்படுத்தி அங்கிருநது 2 நபர்கள் கட்டாயப்படுத்தி கற்பழிக்க முயற்சி செய்தார் என்றாலும் எதிரி பாஸ்கர் தான் காப்பாற்றினார் என்றாலும் வழக்கை அவ்வாறே பதிவு செய்தால் உங்களுக்கு பணிச்சுமை அதிகமாகும் என்பதால் மாற்றி தனியறிக்கை கொடுத்துள்ளிர் என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தழுவி கொள்வதாக தெரிவித்தார்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.